**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 600006.**

ந.க.எண்.796/ஈ2/2012 நாள் 16.6.2012.

| | |
|---|---|
| **பொருள்** | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை –6 – ஆசிரியர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையில் புதிய குறுவள மையங்கள் அமைப்பதற்கு இடம் (Location) தேர்ந்தெடுத்து அளித்தல் – சார்பு. |
| **பார்வை** | அரசாணை நிலை எண். 143, பள்ளிக்கல்வித் (வி1)துறை, நாள் 19.09.2011 |

. . . . .

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுப் பயிற்சி பெற்ற அனைத்து தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும், பயிற்சி செம்மையுற நடைபெற உதவிய அனைத்து மாவட்ட ஆசிரியர்கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், அனைத்துவகைக் கல்வி அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

கோடை விடுமுறையிலும் பயிற்சி, சிறப்பாக நடைபெற்றமைக்கு ஆசிரியர்கள் தங்களுக்கு அருகாமையில் உள்ள எந்தப் பயிற்சி மையத்திலும் கலந்து கொள்ளலாம் என அனுமதிக்கப்பட்டதும் ஒரு சிறப்புக் காரணமாக அறியப்படுகிறது.

தற்போது பள்ளிகள் திறக்கப்பட்டு புதிய பாடநூல்கள் பெறப்பட்ட நிலையில், குறுவள மையங்கள் வாயிலாகத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை சார்ந்து ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. மேலும், விடுப்பு மற்றும் தேர்வு எழுதுதல் போன்ற பணிகளால் பயிற்சியில் பங்குகொள்ளாத ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட வேண்டியுள்ளது.

மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான குறுவள மையங்கள், எளிதில் அணுக இயலாத நிலையிலும் போக்குவரத்து வசதி குறைபாட்டுடனும், போதிய கழிப்பறை வசதி, குடிநீர் வசதியின்றியும் அமைந்துள்ளன. இதனால் ஆசிரியர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு பெரும்பாலான ஆசிரியர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகாமையிலும் பல ஆசிரியர்களும் எளிதாக வந்து செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகளுடன் கூடிய பெரிய ஊர்/சிறிய நகரங்களில் உள்ள அனைத்து வசதிகளையும் கொண்ட பள்ளிகளில் குறுவள மையங்களை அமைத்தால் ஆசிரியர்களுக்கு நன்மை பயப்பதாக அமையும்.

www.TeacherTN.com

அவ்வாறு வசதியுள்ள **குறுவள மையப் பள்ளிகளைத் தேர்வு செய்திடும் பொருட்டு, தற்போது பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களிடமும் அவர்களின் விருப்பத்திற்கேற்ப குறுவள மையங்களை அமைப்பதற்காக ஒவ்வோர் ஆசிரியரிடமும் கீழ்க்காணும் படிவத்தின் வாயிலாகத் தகவல்கள் கோரப்படுகின்றன.**

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், அனைத்து உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களிடம் **கீழ்க்காணும் படிவத்தினை** அளித்து பூர்த்தி செய்து பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>படிவம்</u>**

**மாவட்டம் :** **ஒன்றியம்:**

(ஆசிரியர்கள் தாங்கள் கலந்து கொள்ள விரும்பும் நகரங்கள் / ஊர்களின் (Location) பெயர்களை மட்டும் குறிப்பிட்டு விருப்பம்1, விருப்பம்2, விருப்பம்3 என வரிசை அடிப்படையில் அளிக்கவும் கோரப்படுகிறார்கள்)

| **ஆசிரியர் பெயர் :** | **பயிற்சிக்கெனக் கலந்து கொள்ள விரும்பும் இடத்தின் பெயர் (Location), முகவரி** |
|---|---|
| **பதவி :** | **விருப்பம் 1.** |
| **பள்ளியின் பெயர் :** | **விருப்பம் 2.** |
| **கற்பிக்கும் வகுப்பு :** | **விருப்பம் 3.** |
| **கற்பிக்கும் பாடம் :** | **செல்பேசி எண்:**<br>**ஆசிரியர் கையொப்பம்.** |

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், ஒன்றியம் வாரியாக ஆசிரியர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட படிவங்களைத் தொகுத்து மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்களிடம் **22/6/12**அன்று ஒப்படைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இயக்குநருக்காக**

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
3. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்,
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
5. அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்

(குறிப்பு– அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகளிடமிருந்து இப்படிவங்களைப் பெற்று தொகுத்து மாகஆபநி–லிருந்து மேல் நடவடிக்கைக்கான தகவல் பெறும் வரை பராமரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்)

www.TeacherTN.com